அன்பான இயேசுவே
அபிஷேக நாதரே
உம்மாலே தான் நாங்கள் வாழ்கிறோம்
உமக்காகவே நாங்கள் வாழ்கிறோம் -2

திருரத்தம் சிந்தினீர்
பாவங்கள் கழுவினீர் -2
பரிசுத்த வாழ்விற்கு பங்காக்கினீர்
பரம பிதாவின் பிள்ளை ஆக்கினீர்
(அன்பான )
கண்ணீரை போக்கினீர்
களிப்பாக மாற்றினீர் -2
கவலைகள் துக்கங்களை நீக்கினீர்
கண்மணி போல எம்மை காக்கின்றீர் -2
(அன்பான )
அபிஷேகம் செய்தீரே
அடிமையை நினைத்தீரே -2
அன்பாலே நிரப்பினீர் எம் இயேசுவே
அனலாக மாற்றினீர் எம் இயேசுவே -2
(அன்பான )
பொன் முகம் காண்கிறோம்
பூரித்து போகிறோம்
இன்னல்கள் நீங்கி மகிழ்வாகிறோம்
இன்பத்தினாலே துதி பாடுகிறோம்
(அன்பான )